## பொது மக்களுக்கான அறிவித்தல்

**1979 இன் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்)சட்டத்தை மீளத்தாபித்து வரைவு செய்யப்பட்ட பயங்கரவாதத்திற்கெதிரான சட்டவரைவுக்கு சிபாரிசுகள்/கருத்துக்கள்/ பிரேரணைகளைப் பெற்றுக்கொள்ளல்.**

தற்போது இலங்கையில் அமுலில் உள்ள 1979 இன் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்திலுள்ள இடைவெளிகளை இனங்கண்டு புதிய சட்டமொன்றை வரைவு செய்யப் பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்ட கல்விமான்கள் குழுவினால் பயங்கரவாதத்திற்கெதிரான சட்டவரைவு வரைவு செய்யப்பட்டுள்ளது.

புதிய ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம், நவீன உலகளாவிய பயங்கரவாதத்தின் சவால்களை எதிர் கொள்ளல், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனி நபர்களின் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளுக்கு இணக்கப்பாடடைதல் என்பதனைக் குறிக்கிறது.

அதன்படி, 1979 இன் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டத்தினை வரைவுபடுத்துவது தொடர்பில் தங்களின் கருத்துக்கள், சிபாரிசுகள், பிரேரணைகள் இருப்பின் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 14 நாட்களுக்குள் செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சுக்கு கிடைக்கச் செய்யுமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

அத்தகவல்களை சமர்பிக்கும்போது “பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கான பிரேரணை” என்று கடித உறையின் இடது மூலையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அல்லது legal@moj.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கோருகிறேன்.

**செயலாளர்,**

**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு,**

**இல. 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**

**கொழும்பு 10.**

செயலாளர்

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு